## *DEPOSITION OF WITNESS*
## *(Chapter XXIII Code of Criminal Procedure)*

## *IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi*
## *CC.No.56/2022 – P.W.1 (LW1)*

| | |
|---|---|
| *Name* | ராகுல் |
| *Father/Husband's Name* | முருகையன் |
| *Village* | ஆலாத்தூர் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 24 |

**எதிரி ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 09.12.2024.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் விக்கிரபாண்டிம் ஆலாத்தூரில் வசித்து மண் பரிசோதனை கன்சல்டிங் அலுவலகத்தில் வேலை செய்து வருகிறேன். எனது தந்தை முருகையன் விபத்தில் இறந்துவிட்டார்.

2. கடந்த 12.09.2019 ம் தேதியன்று காலை 10.00 மணியளவில் எனது அப்பா அவரது சைக்கிளில் விக்கிரபாண்டியம் கடைத்தெருவிற்கு செல்வதற்காக கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ரவிச்சந்திரன் வீட்டிற்கு அருகே சென்றுக்கொண்டிருந்தபோது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த இருச்சக்கர வாகனம் TN50-AX-5127 Splender Plus வாகனத்தை வேகமாக ஓட்டி வந்து சைக்கிளில் சென்றுக்கொண்டிருந்த எனது தந்தையார் மீது மோதிவிட்டார். மேற்படி இருச்சக்கர வாகனமான Splender Plus யை ஓட்டி வந்த நபரின் பெயர் பிரபாகரன். அவர் தற்போது நீதிமன்றத்தில் உள்ளாரா என்றால் - ஆஜர் எதிரிதான். (சாட்சி அடையாளம் காட்டுகிறார்).

3. மேற்படி இருச்சக்கர வாகனம் எனது அப்பாவின் சைக்கிளின் மீது மோதியதால் எனது அப்பாவிற்கு தலை, மூக்கு, நெற்றி பகுதியில் இரத்தக்காயம் ஏற்பட்டது. உடனே அருகில் இருந்த எனது பெரியப்பாக்கள் ராஜேந்திரன்,

குமாரசாமி ஆகியோர்கள் வந்தார்கள். நாங்கள் உடனே 108 ஆம்புலன்சிற்கு போன் செய்து ஆம்புலன்ஸ் வந்தவுடன் காயம்பட்ட எனது தகப்பனாரை நானும் எனது பெரியப்பா குமாரசாமியும் 108 ஆம்புலன்ஸ் மூலம் திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றோம். அங்கிருந்த மருத்துவர் எனது அப்பாவை பரிசோதித்து பார்த்து அவர் இறந்துவிட்டதாக கூறினார். அதன்பிறகு எனது அப்பாவின் பிரேதத்தினை சவக்கிடங்கில் வைத்துவிட்டார்கள். பிரேத பரிசோதனை செய்து மறுநாள் எங்களிடம் ஒப்படைத்தார்கள். நான் சம்பவ நாளன்றே விக்கிரபாண்டியம் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன்.

4. நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை இந்த வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. மெயின்ரோடு என்பது கிழக்கு மேற்காக செல்லும் சாலை என்றால் - சரிதான். எனது வீட்டிலிருந்து ரவிச்சந்திரன் என்பவரது வீடு எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால் - 40 அடி தூரம் இருக்கும்.

2. வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள முருகையன் என்பவரது வீட்டில் நாங்கள் தற்சமயம் இல்லை என்றால் - சரிதான். ரவிச்சந்திரன் வீட்டிற்கு அருகில் உள்ள எனது பெரியப்பா ராஜேந்திரன் வீட்டில் தான் அனைவரும் ஒன்றாக குடியிருந்து வருகிறோம். ராஜேந்திரன் வீட்டிற்கு அருகிலேயே பஸ் ஸ்டாப் உள்ளது என்றால் - சரிதான்.

3. சத்தம் கேட்டவுடன் முதலில் யார் சென்றது என்றால் - நான்தான் சென்றேன். அதன்பிறகு தான் எனது பெரியப்பாக்கள் இருவரும் வந்தனர். சாட்சி ராஜேந்திரன் மற்றும் குமாரசாமி இருவரும் எனது பெரியப்பாக்கள் என்றால் - சரிதான். ரவிச்சந்திரன் வீட்டிற்கு எதிரில் சுடுகாட்டிற்கு செல்லும் சாலை உள்ளது என்றால் - சரிதான். நாங்கள் சத்தம் கேட்டு சென்றபோது சுடுகாட்டிற்கு செல்லும் சாலையில் தான் பைக் கிடந்தது என்றால் - சரிதான்.

4. எனது அப்பா அடிப்பட்டவுடன் மருத்துவமனைக்கு கொண்டு சென்ற பிறகு போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் - சரிதான். போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தபோது நான் சம்பவ இடத்தில் இருந்தேன் என்றால் - சரிதான். அந்த சமயத்தில் என்னிடம் புகார் வாங்கினார்களா என்றால் - இல்லை. விசாரித்தார்கள்.

எத்தனை மணிக்கு காவல்நிலையம் சென்றேன் என்றால் - சம்பவத்தன்று மாலை சுமார் 05.00 மணியிருக்கும்.

5. நான் என்ன படித்துள்ளேன் என்றால் - ITI படித்துள்ளேன். நான் காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றபோது யார் யார் வந்தார்கள் என்றால் - ஊர்க்காரர்கள் நிறைய பேர் வந்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவினை நான் எழுதவில்லை என்றால் - சரிதான். யார் எழுதினார்கள் என்றால் - சித்தப்பா சிவபாலன் எழுதினார். எனது சித்தப்பாவிற்கு எதிரியின் பெயர், அப்பா பெயர், ஊர் உள்ளிட்ட முகவரியை யார் சொன்னார்கள் என்றால் - போலிசார் தான் சொன்னார்கள்.

6. எனது சித்தப்பா போலிசாரிடம் தகவலை பெற்றுக்கொண்டுதான் புகாரினை எழுதினார் என்றால் - சரிதான். நான் இறந்தவரின் மகன் என்பதால் என்னிடம் கையொப்பம் மட்டும் வாங்கிக்கொண்டார்கள் என்றால் - சரிதான். எதிரியை பற்றிய தகவல்கள் எதுவும் எனக்கு நேரிட்டு தெரியாது என்றால் -சரிதான்.

7. என் அப்பா இறப்பிற்கு இழப்பீடு கேட்டு மனு செய்துள்ளோம் என்றால் - சரிதான். உண்மையில் என் தந்தையின் இறப்பானது எதிரி வாகனம் ஓட்டியதால் ஏற்பட்டது அல்ல என்றால் - சரியல்ல. எனது அப்பா கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி செல்லும்போது திடீரென்று வடக்கு பக்கம் திரும்பியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் - சரியல்ல.

ஒம்/- எம். சுரேஷ்கார்த்திக்,
நீதித்துறை நடுவர் எண்.2,
மன்னார்குடி

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT***
***Mannargudi***
***CC.No.56/2022 – P.W.2 (LW2)***

| | |
|---|---|
| *Name* | குமாரசாமி |
| *Father/Husband's Name* | வடுவு |
| *Village* | ஆலாத்தூர் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *55* |

**எதிரி ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 09.12.2024.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் விக்கிரபாண்டியம் ஆலாத்தூர் பெருமாள் கோவில் தெருவில் வசித்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் வாகன விபத்தில் இறந்துபோன முருகையன் என் உடன் பிறந்த தம்பி ஆவார். அவர் விபத்தில் இறந்துவிட்டார். அ.சா.1ராகுல் எனது தம்பியின் மகன் ஆவார்.

2. சுமார் 4 வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் காலை 10.00 -10.30 மணியளவில் எனது தம்பி முருகையன் அவரது சைக்கிளில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வேலைக்காக சென்றுக்கொண்டிருந்தபோது ராஜேந்திரன் வீட்டருகில் சென்றுக்கொண்டிருந்தபோது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த இருச்சக்கர வாகனம் எனது தம்பியின் மீது மோதியது. மேற்படி விபத்தினை ஏற்படுத்திய இருச்சக்கர வாகனத்தினை ஓட்டி வந்த நபரின் பெயர் பிரபாகரன். அவர் ஆஜர் எதிரிதான். (சாட்சி அடையாளம் காட்டுகிறார்).

3. உடனே சம்பவ இடத்திற்கு நான், எனது மனைவி, எனது இன்னொரு தம்பியான தேவதாஸ், எனது அண்ணன் ராஜேந்திரன், எனது தம்பி முருகையனின் மகன் ராகுல் ஆகியோர்கள் வந்தோம். 108 ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லி ஆம்புலன்சில் காயம்பட்ட முருகையனுடன் நானும் அவரது மகன் ராகுல் என்பவரும்

திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றோம். அங்கு மருத்துவர் பரிசோதித்து காயம்பட்ட முருகையன் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார். பின்னர் மறுநாள் பிரேத பரிசோதனை செய்து எங்கள் வசம் ஒப்படைத்தார்கள். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. ராஜேந்திரன் வீட்டில்தான் இறந்துபோன முருகையன் மற்றும் அவரது மகன் ராகுல் ஆகியோர்கள் வசித்து வந்தனர் என்றால் - சரிதான். இறந்துபோன முருகையன் ராஜேந்திரன் வீட்டிலிருந்துதான் வேலைக்கு கிளம்பி சென்றார் என்றால் - சரிதான்.

2. சத்தம் கேட்டு ராகுல், ராஜேந்திரன் சென்றபிறகு நான் சம்பவ இடம் சென்றேன் என்றால் - சரிதான். ராஜேந்திரன் வீட்டிலிருந்து கிழக்கு பக்கம் பஸ் ஸ்டாப் இருக்கிறது என்றாலும் அதன்பிறகு தான் எங்களது வீடுகள் உள்ளன என்றாலும் - சரிதான்.

3. நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது அந்த இடத்தில் சுமார் 50 பேர் கூட்டமாக நின்றார்கள் என்றால் - சரிதான். ஊரில் உள்ளவர்கள் போலிசிற்கு போன் செய்து போலிசார் வந்துவிட்டார்கள் என்றால் - சரிதான்.

4. இறந்துபோன முருகையனின் இறப்பிற்கு இழப்பீடு கோரி மனு செய்துள்ளார்கள் என்றால் - அதுபற்றி எனக்கு தெரியாது.

5. நான் சொல்வதுபோன்று எதிரி இறந்த முருகையனின் இறப்பிற்கு காரணமல்ல என்றால் - சரியல்ல. முருகையன் சாலையை குறுக்கு கடக்கும்போது தடுமாறி கீழே விழுந்து விபத்தினை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் - சரியல்ல. இழப்பீடு பெற வேண்டி எதிரியின் மீது இந்த வழக்குன போடப்பட்டுள்ளது என்றால் - சரியல்ல.

ஒம்/- எம். சுரேஷ்கார்த்திக்,
நீதித்துறை நடுவர் எண்.2,
மன்னார்குடி.